உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்
திரை மூடி வாழும் ஒரு ஜீவிதம்
வெளி தெரியாமல் ஆடும் உயிர் நாடகம்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்

புரியாத புதிராக ஒரு தென்றல் போகும்
புயலாகும் நேரத்தில் இடியாக மாறும்
புரியாத புதிராக ஒரு தென்றல் போகும்
புயலாகும் நேரத்தில் இடியாக மாறும்

அழியாத கதையாகி வரலாறு நீளும்
அவர் நாமம் ஒரு காலம் தமிழீழம் பேசும்
அழியாத கதையாகி வரலாறு நீளும்
அவர் நாமம் ஒரு காலம் தமிழீழம் பேசும்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்
திரை மூடி  வாழும் ஒரு ஜீவிதம்
வெளி தெரியாமல் ஆடும் உயிர் நாடகம்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்

நதி மூலம் அறியாமல் பல வாய்கள் பேசும்
இவர் நடைபோகும் திசை மீதில் குளிர் காத்து வீசும்
நதி மூலம் அறியாமல் பல வாய்கள் பேசும்
இவர் நடைபோகும் திசை மீதில் குளிர் காத்து வீசும்

விதி கீறும் வரைகோடு தவறாகி போகும்
என்ன விளையாட்டு இதுவென்று சிலர் கூற கூடும்
விதி கீறும் வரைகோடு தவறாகி போகும்
என்ன விளையாட்டு இதுவென்று சிலர் கூற கூடும்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்
திரை மூடி  வாழும் ஒரு ஜீவிதம்
வெளி தெரியாமல் ஆடும் உயிர் நாடகம்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்

விடைகொள்ளும் நேரத்தில் துளி ரெண்டு வீழும்
போக விடுகின்ற இதயங்கள் எரி கொண்டு மூளும்
விடைகொள்ளும் நேரத்தில் துளி ரெண்டு வீழும்
போக விடுகின்ற இதயங்கள் எரி கொண்டு மூளும்

தடையென்ன தடையென்று கரு வேங்கை பாயும்
இவர் தருகின்ற ஒளி வெள்ளம் பகையள்ளி போகும்
தடையென்ன தடையென்று கரு வேங்கை பாயும்
இவர் தருகின்ற ஒளி வெள்ளம் பகையள்ளி போகும்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்
திரை மூடி வாழும் ஒரு ஜீவிதம்
வெளி தெரியாமல் ஆடும் உயிர் நாடகம்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்

புவி மீதில் இவர் வாழ்வு பெரு விஸ்வரூபம்
கரும்புலி நெஞ்சம் இரும்பல்ல கசிகின்ற ஈரம்
புவி மீதில் இவர் வாழ்வு பெரு விஸ்வரூபம்
கரும்புலி நெஞ்சம் இரும்பல்ல கசிகின்ற ஈரம்

தமிழீழம் இது ஒன்றே கரு வேங்கை தாகம்
இவை கதையாகி போகாமல் கன காலம் வாழும்
தமிழீழம் இது ஒன்றே கரு வேங்கை தாகம்
இவை கதையாகி போகாமல் கன காலம் வாழும்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்
திரை மூடி வாழும் ஒரு ஜீவிதம்
வெளி தெரியாமல் ஆடும் உயிர் நாடகம்

உயிர் மின்னல் கீறும் ஒரு ஓவியம்
அது வரைகின்ற நேரம் பெரும் காவியம்